**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.54/16**

2023-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.திருவேங்கடம், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.திருவேங்கடம், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த.பெ.கோவிந்தராஜ் |
| கிராமம் | - அழிவிடைதாங்கி |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

13.09.2023
பி.வா.சா.1.
11 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

நான் அழிவிடை தாங்கியில் வசிக்கிறேன். குப்பன் என்பவர் எனது மாமனார்தான். 1ம் பிரதிவாதி முனியம்மாளின் கணவர்தான் நான். தாவா சொத்துக்கள் வயலூரிலும், அழிவிடைதாங்கியிலும் உள்ளது. தாவா சொத்துக்கள் 3 அட்டவணை சொத்துகளாக குறிப்பிடப்பட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மாமனாருடன் பிறந்தவர்தான் 8ம் பிரதிவாதி ஜோதி என்கிற சின்னபையன். என் மாமனாரின் தம்பி ஆவார். 8ம் பிரதிவாதிக்கும், குப்பனுக்கும் அவர்களது தந்தை உயிருடன் இருந்த காலத்திலேயே பாகம் பிரித்துக்கொண்டார்கள். தாவா பி.அட்டவணை சொத்தில் உள்ள 1 முதல் 6 வரையிலான அயிட்ட சொத்துக்கள் குப்பன் உயிருடன் இருந்த காலத்திலேயே 2006ம் வருடம் அவரது தம்பி 8ம் பிரதிவாதியான ஜோதி என்கின்ற சின்னபையன் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார்.

2) அதே சொத்தை குப்பன் அவரது வாரிசுகளும் சேர்ந்து கொண்டு 2007ம் வருடம் மோசடியாக குப்பனின் மற்றொரு மகனான 3ம் பிரதிவாதி பெருமாள் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார்கள். 8ம் பிரதிவாதி குப்பனிடம் பெற்ற கிரைய சொத்தை அவர் அனுபவித்து வந்து தன் மகனான 10வது பிரதிவாதி மயில்வேல் என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் செய்து வைத்தார். மேலும் பி அட்டவணை 5, 6 அயிட்ட சொத்தை 8ம் பிரதிவாதி 12ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தார். அந்த சொத்தைதான் அவரது மகனுக்கும் தானசெட்டில்மெண்ட் செய்து வைத்திருந்தார். 2012ம் வருடம் ஜோதி என்ற சின்னபையன் தாவா பி. அட்டவணை சொத்தில் 5 மற்றும் 6வது அயிட்ட சொத்து முழுவதையும் 12வது பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார்.

3) 2014ம் வருடம் தாவா 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் 11ம் பிரதிவாதியான லீலாகுமாரி என்பவருக்கு 8ம் பிரதிவாதியும் அவரது மகன்களான 9, 10 பிரதிவாதிகள் மற்றும் 12ம் பிரதிவாதியோடு சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளார். தற்போது அந்த சொத்துக்களுக்கு பட்டா 11ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டு சொத்தை 11ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார். அதனால் குப்பன் உயிரோடு இருக்கும் காலத்திலேயே பாக பிரிவினை செய்துகொண்டு அவரே விற்பனை செய்துவிட்டதால் பாகம் பிரித்து தரக்கோரி வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளது சரியல்ல என்பதுதான் என்னுடைய எதிர்வியாஜியம்.